# UNIT-I 2MARKS

1. நாயங்கார முறை பற்றி குறிப்பு வரைக:-

தமிழகத்தில் விஜயநகர ஆட்சி ஏற்பட்ட காலத்தில் இருந்தே ஆட்சியாளர்கள் முஸ்லிம்களுடனும், பிறருடனும் போர் தொடுக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தனர்.

பிறருடன் போர் தொடுக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது. அதனால் நாடுகளை காப்பாற்றிக் கொள்ள படைகளைக் கொண்ட ஒரு அமைப்பு தேவைப்பட்டது.

இதனால் தமிழகத்தை சில மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து ராணுவ அதிகாரிகளான நாயக்கர்களிடம் ஒப்படைத்தனர். இந்த முறை நாயங்கார முறை அல்லது அமர நாயங்கார முறை என்று அழைக்கப்படுகிறது.

2. வர்ணகால சமுதாய முறையைப் பற்றி எழுதுக:-

வர்ணகால சமுதாய முறை 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

1. வர்ண ஆசிரமமுறை
2. பிராமணர்
3. வைசியர்
4. சத்திரியர்

3. பாளையக்காரர் முறை பற்றி குறிப்பு வரைக:-

நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் மதுரையில் அறிமுகப்படுத்தப் பட்டது பாளையக்காரர் முறை ஆகும்.

விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் நியமிக்கப்பட்டு மதுரையின் முதல் நாயக்கராக விளங்கிய விஸ்வநாத நாயக்கர் தனது தளவாய் அரியநாதரின் அறிவுரையின்படி உருவாக்கிய முறைதான் இந்த பாளையக்காரர் முறை ஆகும்.

பாளையக்காரர் முறை மதுரையில் முக்கியமான பொருளாதார, சமுதாய, அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது.

4. இருவகை வைணவ இயக்கங்கள் யாவை?

1. வடகலை இயக்கங்கள்
2. தென்கலை இயக்கங்கள்

5. மதுரா மிஷன் என்ற அமைப்பின் தலைவர் யார்?

மதுரா மிஷன் என்ற அமைப்பின் தலைவர் ஜான்-டி-பிரிட்டோ பாதிரியார் ஆவார்.

6. ஜான்-டி-பிரிட்டோ பாதிரியார் குறிப்பு வரைக:-

மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் (1682-89) காலத்தில் மதுரை நாட்டிலும், மறவர் நாட்டிலும் கிறிஸ்தவ சமயம் அதிகமாகப் பரவுவதற்குக் காரணமாக இருந்தார்.

இவர் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் ஒரு உயர் குடியில் பிறந்தவர் ஆவார்.

1662-ல் இவர் இயேசு சங்கத்தில் சேர்ந்தார்.

கிறிஸ்தவ சமயத்திற்கு இவர் ஆற்றியத் தொண்டின் காரணமாக "மதுரை மிஷன்" அமைப்பிற்கு தலைவரானார்.

---

7. நாயக்கர்களின் கட்டிடக் கலை படைப்புகள் எங்கு காணப்படுகின்றன?

மதுரை, சிதம்பரம், இராமேஸ்வரம், அழகர்கோவில், திருப்பரங்குன்றம், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், திருவாரூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, காரமங்கலம், தாடிகொம்பு ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

---

8. வெங்காஜி குறிப்பு வரைக:-

வெங்காஜி, ஏக்கோஜி என்றும் அழைக்கப்பட்டார்.

ஷாஜி போன்ஸ்லே என்பவருக்கும் அவரது மனைவியான துக்காபாய்க்கும் பிறந்தவர்.

வெங்காஜி சிவாஜியை போலவே தானும் தக்காண சுல்தான்களின் பிடியிலிருந்து விலகி சுதந்திர அரசை அமைக்க விரும்பினார்.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் வெங்காஜி தனது ஆட்சியை உறுதிப்படுத்தினார்.

9. இரண்டாம் சரபோஜி பற்றி குறிப்பு வரைக:-

இரண்டாம் சரபோஜி 1798 ஜூன் மாதம் முதல் ஆட்சியைக் கைப்பற்றினார்.

அரச பதவியைப் பெற்ற அவர் அதிகாரத்தை பெறவில்லை.

1799-ல் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு ஓய்வூதியம் பெற்று தஞ்சைக் கோட்டைக்குள் ஒதுங்கினார்.

தஞ்சை சரஸ்வதி மகால் சரபோஜியின் மன்னரின் சாதனைக்கு ஒரு விளக்கமாகும்.

10) பிரதானி என்பவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

பிரதானி என்பவர் திவான் என்று அழைக்கப்பட்டார்.

11) மராட்டிய ஆட்சித் துறையின் அதிகாரிகள் யாவர்?

1. தளவாய்
2. பிரதானி
3. மந்திரி
4. தபீர்
5. தர்மாதிகாரி

12) தஞ்சை மராட்டிய அரசர்களின் ஆட்சிப் பிரிவுகள்:-

தஞ்சை மராட்டிய அரசர்களின் ஆட்சிப் பிரிவுகள் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. பட்டுக்கோட்டை
2. மன்னார்குடி
3. மாயவரம்
4. கும்பகோணம்
5. திருவடி

13) கிராம அதிகாரி எவ்வாறு அழைக்கப்பட்டார்:-

கிராம அதிகாரி கர்ணம் என்று அழைக்கப்பட்டார்.

14) மராட்டியர் கால திருமணம் எந்த முறைப்படி நடைபெற்றது?

மராட்டியர் கால திருமணம் ஆரிய முறையின்படி நடைபெற்றது.

15. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை?

மீனாட்சி பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம், சகலகலா வல்லி மாலை, சிதம்பரச் செய்யுட்கோவை, நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களை எழுதினார்.

16. பிள்ளை பெருமாள் அய்யங்கார் எழுதிய நூல்கள் யாவை?

அழகர் அந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து அந்தாதி, திருவரங்கத்து மாலை போன்ற நூல்களையும் எழுதினார்.

17. சுப்பிரதீபக் கவிராயர் எழுதிய நூல்கள் யாவை?

விறலிவிடு தூது, கூளப்ப நாயக்கன் காதல் ஆகிய நூல்களை எழுதினார். இவர் காலத்தில் இராமப்பையன் அம்மானை, இரவிக்குட்டிப் போர், மதுரை வீரன் கதை போன்ற பல நாட்டுப்புற இலக்கியங்கள் தோன்றின.

18. மராட்டியர்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?

அரிசி, மிளகு, துணி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

தகரம், ஈயம், இரும்பு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

19. தஞ்சையில் ஆளுநர் நியமனம் செய்தவர் யார்?

மதுரை சொக்கநாத நாயக்கர் வெற்றி பெற்ற உடன் ஆளுநர் நியமனம் செய்யப்பட்டது.

தஞ்சை ஆளுநராக நியமிக்கப்பட்டவர் அழகிரி ஆவார்.

20) தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் யாவை?

தஞ்சை, மதுரை, செஞ்சி, வேலூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.

21) பாளையக்கார முறையினை அறிமுகப்படுத்தியவர் யார்?

பாளையக்கார முறையினை அறிமுகப்படுத்தியவர் விஸ்வநாத நாயக்கர் ஆவார்.

22) தஞ்சை மராட்டியர் கால நாணயங்கள் யாவை?

சக்கரம் அல்லது பொன், பகோடா, ஸ்டார் பகோடா, பெரிய பணம், சிறிய பணம் போன்றவையாகும்.

23) சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள நூல்கள் யாவை?

சங்கீத நாராயண கல்யாணம், சந்திரகாச விலாச நாடகம், குறவஞ்சி, பூலோக தேவேந்திர விலாசம், விஞ்ஞ சகராஜ விலாசம், அதிரூபவதி கல்யாணம் போன்ற நூல்கள் இன்னும் எழுத்து வடிவில் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ளது.

24) மராட்டிய கால வரி முறை குறித்து எழுதுக?

5ல்4 பங்கு வரிவசூலித்தனர். (மற்றவரி, உழவுவரி) (வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு மட்டும் வசூலிக்கப்பட்டது) வரி கொடுமை குறைந்தது.

25) தமிழகம் வந்த மராட்டியர் யார்?

தமிழகம் வந்த மராட்டிய மன்னர் வெங்கோஜி ஆவார்.